DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.CC 2/2022

Prosecution witness – PW.1

| | | |
|---|---|---|
| Name | :திருமதி.குருவம்மாள் | Caste: |
| Husband's Name | : சண்முகம் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

17.11.2025 – 12.50 PM

1ம் எதிரி ஆஜர் இல்லை. மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2ம் எதிரி வேறு வழக்கில் நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

முதல் விசாரணை:–

1. நான் கமுதி கல்லுப்பட்டி ரோட்டில் எனது மகளுடன் குடியிருந்து வருகிறேன். கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு நானும் என்னுடைய மகள் நந்தினியின் மகளும் எனது பேத்தியுமான ஹரினிஸ்ரீ என்பவரும் வீட்டிலிருந்த போது மதியம் 01.00 மணியளவில் என்னுடைய பேத்தி என்னிடம் யாரோ ஒரு நபர் வாசலில் நின்று தண்ணீர் கேட்பதாகவும், அதனால் அவருக்கு தண்ணீர் கொடுக்க போகிறேன் என்று சொல்லிக் கொண்டு வீட்டிலிருந்த சொம்பு ஒன்றில் தண்ணீரை எடுத்துக் கொண்டு வெளியே சென்றார். நான் என்னுடைய பேத்தியிடம் முன் பின் தெரியாத யாருக்கும் இப்படி வெளியே சென்று தண்ணீர் கொடுக்கக்கூடாது என்று கூறியும் என்னுடைய பேத்தி கேட்காமல் தண்ணீரை கொடுத்துவிட்டு கதவை தாழிடாமல் வந்து விட்டார்.

2. பின்னர் 10 நிமிடங்கள் கழித்து நானும் எனது பேத்தியும் மட்டும் வீட்டிற்குள் இருந்த போது அந்த நபர் வீட்டிற்குள் வந்தார். நான் அந்த நபரிடம் ஆளில்லாத வீட்டிற்குள் ஏன்டா இப்படி வாரனு கேட்டேன். அப்படி கேட்டு முடிப்பதற்குள் அந்த நபர் என்னை கீழே தள்ளிவிட்டு நான் கழுத்தில் அணிந்திருந்த 2 –1/2 சவரன் தங்க செயினை பறித்துக் கொண்டு ஓடிவிட்டான். எனது பேத்தி வீட்டின் முன் வாசல்கதவை திறந்து அருகில் இருந்தவர்களிடம்

ஒருவன் செயினை பறித்துக் கொண்டு ஓடிய விபரத்தை கூறினார். உடனே அருகில் இருந்தவர்கள் அந்த நபரை பிடிப்பதற்காக சென்றுள்ளார்கள். ஆனால் அந்த நபர் எங்கு சென்றார் என்றே தெரியவில்லை. செயினை அறுத்த போது எனக்கு கழுத்தில் காயம் ஏற்பட்டுவிட்டது. எனது பேத்தி சம்பவம் குறித்து எனது மகளிடமும், எனது உறவினர்களிடமும் கூறினார். எனது மகள் வேலைக்கு சென்றிருந்ததால் உடனடியாக வர முடியவில்லை.

3. என்னை உறவுக்கார பையன் ஒருவர் எங்கள் ஊரில் உள்ள வெங்கடேஸ்வரா தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். நான் சிகிச்சை பெற்றுக் கொண்டேன். சம்பவம் குறித்து எனது உறவினர்கள் யாரோ போலீசாருக்கு தகவல் அளித்ததால் போலீசார் எனது வீட்டிற்கு வந்து விசாரித்தார்கள். நான் வீட்டிலிருந்த போது அவர்களிடம் நடந்த சம்பவத்தை கூறினேன். அவர்கள் புகாரை எழுதிக் கொண்டு என்னிடம் கைரேகை பெற்றுக் கொண்டார்கள்.

4. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கைரேகை என்னுடையது. புகார் மனு நான் அளித்தது தான். அந்த **புகார் மனு அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் போலீசார் என்னிடமிருந்து அந்த நபர் பறித்துச் சென்ற 2-1/2 சவரன் செயினில் சுமார் 1பவுன் எடையுள்ள தங்க கட்டியை கைப்பற்றியிருப்பதாக கூறினார்கள். நான் தங்க கட்டியை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுக் கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள தங்க கட்டியை தான் நான் பெற்றுக் கொண்டுள்ளேன். **புகைப்படம் அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. என்னுடைய செயினை பறித்துச் சென்ற நபர் யார் என்று எனக்கு தெரியாது. அந்த நபரை பார்த்தாலும் என்னால் அடையாளம் காட்ட இயலாது. ஏன் என்றால் எனக்கு வயதாகிவிட்டதால் கண் பார்வை நன்காக தெரியாது. அன்றாக தினம் ஒரு ஆள் வந்தது மட்டும் தான் தெரியும். அவரது முகத்தை என்னால் சரியாக பார்க்க இயலாவில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

1. சம்பவ தேதி தெரியுமா என்றால் தெரியாது. புகாரில் என்ன விபரங்கள் எழுதப்பட்டுள்ளன என்பதும் எனக்கு தெரியாது. நான் தற்போது வரை வழக்கிற்காக காவல் நிலையம் செல்லவில்லை என்றால் சரிதான். எங்கள் வீட்டின் மேற்கு புறம் காட்டுக் கருவேல மரங்கள் இல்லை என்றால் சரியல்ல. கருவ மரங்கள் உள்ளன. நான் பொய்யாக கூறுகிறேன் என்றாலும், எனது வீட்டருகே கருவேல மரங்கள் இல்லை என்றாலும் சரியல்ல.

2. நான் கூறியபடி சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், வயது முதிர்வின் காரணமாக எனது செயினை எங்கேயோ தவற விட்டு விட்டு எனது மருமகன் போலீசாக இருப்பதால் செல்வாக்கை பயன்படுத்தி பொய்யாக புகார் அளித்து அதை அனுசரித்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

THANGA KARTHIKA Digitally signed by THANGA KARTHIKA Date: 2025.11.17 17:32:11 +0530